# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

**முறையீட்டு மனு எண்.0211/2015**

**ஆணை எண்.009/2015**

**நாள் [illegible]/10/2015**

திரு. மு. சந்தனப்பாண்டி,
துணைத் தலைவர்,
பாண்டவர் மங்கலம் கிராம ஊராட்சி,
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
தூத்துக்குடி மாவட்டம்

**- முறையீட்டு மனுதாரர்**

திரு. செ. பொன்னுசாமி,
ஊராட்சிமன்ற தலைவர்,
பாண்டவர் மங்கலம் கிராம ஊராட்சி,
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
தூத்துக்குடி மாவட்டம்

**- எதிர் மனுதாரர்**

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், பாண்டவர் மங்கலம் கிராம ஊராட்சியை சேர்ந்த திரு.மு.சந்தனப்பாண்டி அவர்களின் முறையீட்டு மனுவில் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.செ.பொன்னுசாமி மீது 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 205ன் கீழ் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின் நடவடிக்கை எண்.ஊநி/0565/2015ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட கோப்பின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார். மேற்படி மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.09.2015 அன்று பெறப்பட்டு 211 எண்ணிட்ட புகார் மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014, சட்டப் பிரிவு 2க்குட்பட்ட உட்பிரிவுகள் (7) மற்றும் (11)–ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுப்பணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஊராட்சி மன்ற அமைப்பு மற்றும் ஊராட்சி பிரதிநிதி இடம் பெறவில்லை. இருப்பினும், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் பாண்டவர் மங்கலம் கிராம ஊராட்சி தலைவர் முறைகேடு பற்றிய கோப்பின் மீது துரித நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பலாம் என தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முடிவு செய்து அதனடிப்படையில் முறையீட்டு மனு முடித்துவைக்கப்படுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

5/10/15

கண்காணிப்பாளர்

**பெறுநர்**

**மாவட்ட ஆட்சியர்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**தூத்துக்குடி.**

நகல்

திரு. மு. சந்தனப்பாண்டி,
துணைத் தலைவர்,
பாண்டவர் மங்கலம் கிராம ஊராட்சி,
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
தூத்துக்குடி மாவட்டம்.